2023 ஜனவரி 12]

மறுப்பேதும் யாரும் கூற முடியாது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சத்தமில்லாமல், 18 ஆண்டுகள் ஓடாமல் இருந்த இராமநாதபுரம், இராமநாதசுவாமி திருக்கோயில் தங்கத் தேரை ஓடவைத்த முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சமயபுரம் திருக்கோயிலில் 13 ஆண்டுகள் ஓடாமல் இருந்த தங்கத் தேரை ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலத்தில் ஓடவைத்துக் காட்டியவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், திருத்தணியில் 12 ஆண்டுகள் ஓடாமல் இருந்த தங்கத் தேரை, திருத்தணி தணிகை முருகனைச் சுற்றி வலம் வரச் செய்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஓடாத திருத்தேர்களை ஓடவைத்தும், புதிதாகத் தேவைப்படுகின்ற திருத்தேர்களையும் ஓடவைத்திருக்கின்ற தேர்ப்பாகன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, கூடிய விரைவில் அவர் கோரிய அந்தத் திருக்கோயிலினுடைய திருத்தேர்ப் பணிகளும் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம்

***17820—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, அப்பேடு கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, அப்பேடு கிராமத்தில் உள்ள அப்பேடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியில் சேலம் மாவட்டத்திற்கு அடுத்து, மாநிலத்தில் இரண்டாவது இடத்தில் உள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் 644 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இதில் 622 கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையிலே செயல்படுகின்றன. இதில் 170 சங்கங்களுக்கு மட்டுமே சொந்தக் கட்டடங்கள் உள்ளன. போளூர் சட்டமன்றத் தொகுதியிலே உள்ளடங்கியிருக்கிற அப்பேடு மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் உட்பட, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து சங்கங்களுக்கும் அரசின் சார்பில் சங்கக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அப்பேடு கிராமத்தில் செயல்பட்டு வரும் TPD 1389 அப்பேடு மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கமானது 1–3–1992–ல் பதிவு செய்யப்பட்டு, 1–6–1992 முதல் செயல்படத் தொடங்கி, நாளது தேதியில், தொடர்ந்து நல்ல முறையில் இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. நாளது தேதியில், சங்கத்தில், 164 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 91 உறுப்பினர்கள் சங்கத்தில் பால் வழங்கி வருகின்றார்கள். சங்கம் நாளொன்றுக்கு சராசரியாக, 700 லிட்டர்

2023 ஜனவரி 12]

பாலை கொள்முதல் செய்து, 10 லிட்டர் பாலை உள்ளூரில் விற்பனை செய்து, 690 லிட்டர் பாலினை திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பி வருகின்றது. இதன்மூலம் மேற்படி கிராமத்தில் 91 மகளிர் பயனடைந்து வருகின்றனர். இச்சங்கம் 2020–2021 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 726 ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. சங்கத்திற்குச் சொந்தமான நிலமோ, மனையோ ஏதுமில்லாததால், TPD *1389 அப்பேடு மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடம் கட்ட ஏதுவாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதியோடு, நிலம் ஒதுக்கித் தரக் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு நிலம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ்* TPD *1389 அப்பேடு மகளிர் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15–8–2019 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் அன்றைய முதலமைச்சர், எங்களுடைய மரியாதைக்குரிய அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து பிரித்து திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க அறிவிப்பு வெளியிட்டார்கள். அதனடிப்படையில், 28–8–2019 முதல் புதிய ஒன்றியம் திருவண்ணாமலையில் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் நல்லாசியோடு தொடங்கப்பட்டு, சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது. நாளொன்றிற்கு 2 இலட்சத்து 70 ஆயிரம் லிட்டர் முதல் 3 இலட்சம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு நிருவாக அலுவலகம் இல்லை. இதைக் கவனத்தில் கொண்ட அன்றைய முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள், இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக அலுவலகம் அமைக்க அனுமதி தந்து,*

25–2–2021 அன்று டெண்டரும் விடப்பட்டது. தேர்தல் தேதி 26–2–2021அன்று அறிவிக்கப்பட்டதால்,பணிதொடங்கப்படவில்லை. ஆட்சி மாற்றத்தின் காரணமாக நிருவாக அலுவலகம் கட்டும் பணி நிறுத்தப்பட்டுவிட்டது. 2021–2022 ஆம் ஆண்டு பால்வளத் துறை மானியக் கோரிக்கையின்போது, திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது; வேலை நடைபெறவில்லை, எப்போது ஆரம்பிப்பீர்கள் என்று கேள்வியைக் கேளுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் நிருவாக அலுவலகம் கட்டப்படும் என்றும், ரூ.7 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலையில் பால் பண்ணை அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் இதே மாமன்றத்தில் அறிவித்தார்கள். அறிவிப்பு தொடர்ந்து அறிவிப்பு நிலையிலேயே உள்ளதால், அரசு அறிவித்தபடி, திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பால் பண்ணையும், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக அலுவலகக் கட்டடமும் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அவையில் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பணிகள் நடைபெறுவதற்கான ஆக்கபூர்வமான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிக விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பியதைப்போல, அந்தக் கட்டடத்தை கட்டுவதற்கான முழு முயற்சிகள் எடுக்கப்பட்டு, கட்டித்தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.